


dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 302 | 4 Pages | 28.5.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 302 | 4 பக்கங்கள் | 28.5.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்**
**பொய்யா விளக்கே விளக்கு**

**விளக்கம்:** (புறத்தில் உள்ள இருளை நீக்கும்) விளக்குகள் எல்லாம் விளக்குகள் அல்ல, சான்றோர்க்கு (அகத்து இருள் நீக்கும்) பொய் யாமையாகிய விளக்கே விளக்கு ஆகும்.

## மாலத்தீவு வெளியுறவுத்துறை மந்திரி இந்தியா வருகை; ஜெய்சங்கருடன் சந்திப்பு



டெல்லி, மே.28

இந்தியாவின் அண்டை நாடு மாலத்தீவு. அரபிக்கடலில் அமைந்துள்ளதீவுநாடான மாலத்தீவுக்கும், இந்தியாவுக்கும் இடையேயான உறவில் கடந்த ஆண்டு பிரச்சினை ஏற்பட்டது. இதையடுத்து, இரு நாடுகளும் மேற்கொண்ட பேச்சுவார்த்தையையடுத்து இருநாட்டு உறவும் மீண்டும் சுமூக நிலைக்கு திரும்பியது.

இதையடுத்து, இரு தரப்பு வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் மேலும் வளர்ச்சியடைந்தது. அதேபோல், மாலத்தீவுக்கு இந்தியா நிதியுதவியுடன் பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

இந்நிலையில், 3 நாட்கள் அரசு முறை பயணமாக மாலத்தீவு வெளியுறவுத்துறை மந்திரி அப்துல்லா கலீல் இந்தியா வந்துள்ளார். அவர் இன்று டெல்லியில் வெளியுறவுத்துறை மந்திரி ஜெய்சங்கரை சந்தித்தார். இந்த சந்திப்பின்போது இருதரப்பு உறவு, வர்த்தகம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அதேபோல், பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலுக்கு மாலத்தீவு அரசுதரப்பில்கண்டனம்தெரிவிக்கப்பட்டுள்ளது.மேலும்,பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் இந்தியாவுக்கு ஆதரவு அளிப்பதாக மாலத்தீவு வெளியுறவுத்துறை மந்திரி அப்துல்லா கலீல் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானை பயங்கரவாதத்திலிருந்து ஒழிக்க அந்நாட்டு மக்கள் முன்வர வேண்டும் பிரதமர் மோடி பேச்சு



அகமதாபாத், மே.28

சொந்த மாநிலமான குஜராத்துக்கு 2 நாட்கள் பயணமாக சென்றுள்ள பிரதமர் மோடி, அங்கு பல்வேறு நலத்திட்ட பணிகளை தொடங்கி வைத்தார். அகமதாபாத்தில் திறந்த வாகனத்தில் ரோடு ஷோ நடத்தினார். சாலையின் இருபுறமும் தொண்டர்கள் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர். அகமதாபாத்தில் திறந்த வாகனத்தில் சென்றபடி, சாலையின் இருபுறமும் திரண்டிருந்த தொண்டர்களை நோக்கி கையசைத்தபடியே உற்சாகமாக சென்றார் பிரதமர் மோடி. வதோதராவில் பேரணியாக சென்ற பிரதமர் மோடியை கர்னல் சோபியா குரேஷியின் குடும்பத்தினர் மலர்தூவி பிரதமர் மோடியை உற்சாகமாக வரவேற்றனர்.

தொடர்ந்துபூஜ்பகுதியில்ஏற்பாடுசெய்யப்பட்டுஇருந்தபொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

இந்தியாவை யார் அச்சுறுத்த நினைத்தாலும் அதற்கான பதிலடி, அவர்கள் வழியிலேயே கொடுக்கப்படும். ஆபரேஷன்சிந்தூர்என்பதுபயங்கரவாதத்தை முற்றிலும் ஒழித்து மனிதநேயத்தை நிலைநாட்டுவதற்கானபோராட்டமாகும். பஹல்காமில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகளுக்கு எதிராக பாகிஸ்தான் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என 15 நாள்கள் காத்திருந்தோம். ஆனால், பாகிஸ்தான் அவ்வாறு எதையும் செய்யவில்லை.

அதனால், நமது முப்படைகளுக்கு முழுச் சுதந்திரம் கொடுத்து பயங்கரவாதிகளுக்கு அவர்கள் வழியிலேயே தகுந்த பதிலடி கொடுத்தோம். ஆபரேஷன் சிந்தூர் தொடங்கிய, 22 நிமிடங்களில் இந்தியாவில் பலம் என்ன என்பது அவர்களுக்கு நிரூபிக்கப்பட்டது. நமது படைகளின் வீரமும், துணிச்சலும் தான் பாகிஸ்தானை வெள்ளைக் கொடியை அசைக்க வைத்து விட்டது. பாகிஸ்தானை பயங்கரவாதத்தில் இருந்து மீட்க அந்நாட்டு மக்கள் முன்வர வேண்டும். பயங்கரவாதம் என்னும் நோயில் இருந்து பாகிஸ்தான் மக்களை விடுவிக்க, அங்குள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும்.

பாகிஸ்தான் குடிமக்கள் உண்ணும் உணவு அமைதியான சூழலுக்கு மத்தியில் இருக்க வேண்டுமே தவிர தோட்டாக்களுக்கு மத்தியில் அல்ல. வறுமையை ஒழிப்பதிலும், பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதிலும் கவனம்செலுத்திவருகிறோம். ஆனால், அவர்கள்(பாகிஸ்தான்)இந்தியாவுக்கு எதிரான வெறுப்பை பரப்புவதிலும், தீங்கு ஏற்படுத்துவதிலும் குறியாக உள்ளனர். முன்பு பிரதமராகப் பதவியேற்கும்போது நாட்டின் பொருளாதாரம் 11வது இடத்தில் இருந்தது. ஆனால், தற்போது 4வது இடத்துக்கு முன்னேறியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## சுப்ரீம் கோர்ட்டிற்கு 3 நீதிபதிகள் பெயர் பரிந்துரை



புதுடெல்லி, மே.28

சமீபத்தில் முன்னாள் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா மற்றும் நீதிபதிகள் அபய், எஸ்.ஓகா மற்றும்திரிவேதி ஆகியோர் ஓய்வு பெற்றனர். இதனால் சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகள் பதவிக்கு 3 காலியிடங்கள் உருவாகின. தற்போது 31 நீதிபதிகள் கொண்டு சுப்ரீம் கோர்ட்டு செயல்பட்டு வருகிறது.

இந்நிலையில் சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான கொலீஜியம் ஐகோர்ட்டு நீதிபதிகள் 3 பேரை சுப்ரீம் கோர்ட்டு நீதிபதிகளாக பரிந்துரை செய்துள்ளது.

பரிந்துரை செய்யப்பட்ட நீதிபதிகள் விபரம் பின்வருமாறு:

1. கர்நாடகா ஐகோர்ட்டு தலைமை நீதிபதி அன்ஜாரியா.
2. கவுகாத்தி ஐகோர்ட்டு தலைமை நீதிபதி பிஸ்னோய்,
3. மும்பை ஐகோர்ட்டு நீதிபதி சந்துர்கர்.

கொலிஜீயத்தின்இந்தபரிந்துரைகள்அங்கீகரிக்கப்பட்டால்,சுப்ரீம்கோர்ட்டு அதன்முழுஅனுமதிக்கப்பட்ட34நீதிபதிகள்எண்ணிக்கையுடன்செயல்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ரூ.118 கோடியில் மூத்த குடிமக்களுக்கான 3 உறைவிட இல்லம்: முதல்வர் அடிக்கல் நாட்டினார்

சென்னை, மே.28

கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மொத்தம் ரூ.118.33 கோடி மதிப்பில் 3 மூத்த குடிமக்கள் உறைவிடங்களுக்கு அடிக்கல் நாட்டி, மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்கா, மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாய் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்து, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். கொளத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ராஜாஜி நகரில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை திருக்கோயில்கள் சார்பில் கொளத்தூர், பழனி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் கட்டப்படவுள்ள மூன்று மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்களின் கட்டுமான பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

அதன்படி, தேவி பாலியம்மன் திருக்கோயில் மற்றும் இளங்காளியம்மன் திருக்கோயில் சார்பில் ரூ.8.88 கோடி மதிப்பீட்டில் கொளத்தூரில் 27,525 சதுரடி கட்டிட பரப்பளவில் 75 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையிலும், திண்டுக்கல் மாவட்டம், பழனி, தண்டாயுத பாணி சுவாமி திருக்கோயில் சார்பில் ரூ.8.48 கோடி மதிப்பீட்டில் பழனியில் 100 மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையிலும், திருநெல்வேலி மாவட்டம், நெல்லையப்பர் திருக்கோயில் சார்பில் ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் பாளையங்கோட்டையில்50மூத்த குடிமக்கள் பயன்பெறும் வகையிலும் மூத்த குடிமக்களுக்கான உறைவிடங்களின் கட்டுமான பணிகளுக்கு முதல்வர் அடிக்கல் நாட்டினார்.




அதனைத் தொடர்ந்து, ஜி.கே.எம். காலனி பிரதான சாலை, அரிச்சந்திரா மைதானத்தில் அனிதா அச்சீவர்ஸ் அகாடமி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அனிதா அச்சீவர்ஸ்அகாடமியில்பயிற்சிமுடித்த 350 மாணவ, மாணவிகளுக்கு தையல் இயந்திரங்கள், 131 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் 100 பயனாளிகளுக்கு கண்ணாடிகளை வழங்கினார். தொடர்ந்து, ஜி.கே.எம். காலனி 24A தெருவில், சென்னை பெருநகர வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் ரூ.2 கோடியே 89 லட்சத்து 40 ஆயிரம் செலவில் ஜெனரல் குமாரமங்கலம் குளத்தினை ஆழப்படுத்தி, புதிதாக குளக்கரை, நடைபாதை, சுற்றுச்சுவர் மற்றும் சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூ.1 கோடியே 47 லட்சம் செலவில் இறகுப்பந்தாட்ட விளையாட்டுத்திடல், யோகா மேடை, செயற்கை நீரருவி, குழந்தைகள் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் திறந்தவெளி உடற்பயிற்சி உபகரணங்களுடன் மேம்படுத்தப்பட்ட ஜெனரல் குமாரமங்கலம் குளம் மற்றும் பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதல்வர் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, பெரியார் நகர் 4வது தெருவில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 150 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.1 கோடியே 47 லட்சம் மதிப்பிலான இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர்களை முதல்வர் வழங்கினார். கொளத்தூர் தொகுதியில் உள்ள குமரன் நகர் 80 அடி சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பருவமழை காலங்களில் வெள்ள பாதிப்பு ஏற்படாமல் தடுக்க கொளத்தூர் மற்றும் மாதவரம் வட்டத்தில் அமைந்துள்ள தணிகாச்சலம் நகர் உபரிநீர் கால்வாயினை ரூ.91 கோடியே 36 லட்சம் செலவில் முடிவுற்ற திறந்தவெளி கால்வாய் மற்றும் மூடிய வடிவிலான கால்வாயாக மேம்படுத்தப்பட்ட தணிகாச்சலம் நகர் கால்வாயை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, பி.கே.சேகர்பாபு, சென்னை மாநகராட்சி மேயர் பிரியா மற்றும் மக்கள் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

## நிவாரண உதவி வழங்கியவர்களை தாக்கியதாக புகார் கட்சியில் அங்கீகாரம் பெற உண்மைக்கு புறம்பான கருத்துகள்: காவல் ஆணையர் அருண் விசாரிக்க உத்தரவு

சென்னை, மே.28

வியாசர்பாடி தீ விபத்துக்கு பிறகு தாக்கப்பட்டதாக உண்மைக்கு புறம்பான கருத்துகள் பரவி வருகிறது. மேலும் விசாரணை மேற்கொள்ள துணை ஆணையர் நியமனம் செய்து காவல் ஆணையர் அருண் உத்தரவிட்டுள்ளார். இதுகுறித்த அவரது அறிக்கையில் கூறியிருப்பதாவது: வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் குடிசை பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து மற்றும் அதன் தொடர்ச்சியாக சமூக வலைத்தளங்களில்எழுந்தகுற்றச்சாட்டுகளுக்கு போலீசார் விளக்கம் அளித்துள்ளனர்.

அதில் வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகர் குடிசை பகுதியில் ஏற்பட்ட தீ விபத்திற்கு பிறகு சில அமைப்பின் நிர்வாகிகள் போலீசாரால் தாக்கப்பட்டதாக கூறப்படும் நபர்கள் அளித்த புகாரின் பேரில் சென்னை பெருநகர வடக்கு மண்டல இணை ஆணையர் கொடுத்த அறிக்கையின்படி, செய்திகளில் வெளியானது போன்று காவல் துறையினரால் மேற்படி அமைப்பின் நிர்வாகிகள் தாக்கப்பட்டதாக தெரியவரவில்லை.



மேலும் அவ்விசாரணையில் ஒருசிலர் அவர்கள் சார்ந்த கட்சியில் அங்கீகாரம் பெறுவதற்காக உண்மைக்கு புறம்பான கருத்துகளை பரப்பி வருவதாகத் தெரிய வருகிறது. இருப்பினும், சென்னை பெருநகர காவல் ஆணையர் இது தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ள துணை ஆணையரை (குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றத் தடுப்பு பிரிவு) நியமித்து உத்தரவிட்டுள்ளார். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## பருவமழையால் மக்கள் பாதிக்காத வகையில் அதிகாரிகள் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை, மே.28

பருவ மழையால் பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைத்து துறை அதிகாரிகளும் ஒருங்கிணைந்து களப் பணியாற்ற வேண்டும் என துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணிகள், சென்னை பெருநகர மாநகராட்சியால் மேம்பாட்டு பணிகளுக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நீர்வழிக் கால்வாய்கள், குளங்கள் மறு சீரமைக்கும் பணிகள், 2024 வடகிழக்கு பருவமழையின் போது நீர் தேங்கிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு பணிகள், நெடுஞ்சாலைத்துறை, நீர்வளத்துறை, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் (டான்ஜெட்கோ), வனத்துறை, சென்னை பெருநகர கழிவு நீரகற்று வாரியம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் உள்ளிட்ட துறைகளால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பெருநகர




சென்னை மாநகராட்சியின் மண்டல வாரியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.


இந்த பணிகள் நடைபெறும் பகுதிகளைச் சேர்ந்த அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து கலந்துரையாடி பணிகள் விரைவாக முடிவடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். பருவமழையால் பொதுமக்கள் பாதிக்காத வகையில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து களப்பணியாற்றி அரசிற்கு நற்பெயர் பெற்றுத் தரவேண்டும் என அதிகாரிகளுக்கு துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் நேரு, அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயலாளர் முருகானந்தம், துணை மேயர் மகேஷ் குமார், செயலாளர்கள், அரசுஉயர்அலுவலர்கள்கலந்து கொண்டனர்.

## தமிழகத்தில் வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் இருக்கும் கர்ப்பிணி தாய்மார்கள் பிரசவ தேதிக்கு முன்பே மருத்துவமனையில் அனுமதி: பொது சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

சென்னை, மே.28

தென்மேற்கு பருவமழையையொட்டி சுகாதாரத்துறை சார்பில் விடுத்த வழிகாட்டு நெறிமுறைகள்: மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில்சுகாதாரப்பணியாளர்கள்24மணிநேரமும் தயாராக இருக்க வேண்டும். மருத்துவமனைகளில் அவசரகால மருந்துகள், தடுப்பூசிகள் மற்றும் போதுமான படுக்கைகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். மின்வெட்டு ஏற்பட்டால் மருத்துவமனைகளில் நோயாளிகள் பாதிக்காத வகையில் ஜெனரேட்டர் மூலம் மின்விநியோகம் செய்வதை உறுதி செய்ய வேண்டும்.

நிவாரணமுகாம்களில்மருத்துவக்குழுதயார்நிலையில் இருக்க வேண்டும். முகாம்களில் சுகாதாரமான உணவு மற்றும் குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். அதிக ஆபத்து இருக்கும் பகுதிகளை கண்டறிந்து அத்தியாவசிய மருந்து பொருட்களுடன் விரைவு மீட்புக் குழுக்களின் உதவியுடன் சுகாதாரப்



பணிகளை மேற்கொள்ள வேண்டும். வெள்ள அபாயம் உள்ள பகுதிகளில் இருக்கும் கர்ப்பிணிதாய்மார்கள்பிரசவ தேதிக்கு முன்பே மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டும்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து இடங்களிலும் குளோரினேஷன் செய்யப்பட வேண்டும். திடக்கழிவுகள் மற்றும் இறந்த விலங்குகளை உடனடியாக பாதுகாப்பான முறையில் அப்புறப்படுத்த வேண்டும். பெருமளவில் உயிரிழப்பு ஏற்பட்டால், உடல்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கான வசதிகளை மேற்கொள்ள வேண்டும். மருத்துவமனைகளில் மற்றும் நிவாரண முகாம்களில் கழிவறை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்எனஅதிகாரிகளுக்குசுகாதாரத்துறை இயக்குநர் உத்தரவிட்டுள்ளார்.




# வேகமெடுக்கும் கொரோனா.. இந்தியாவில் 1,000 பேர் தொற்றால் பாதிப்பு

புதுடெல்லி, மே.28

தெற்காசியாவில் கொரனோ தொற்று மீண்டும் வேகமாக பரவி வரும் நிலையில், இந்தியாவில் அதன் பாதிப்பு எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண்டி பதிவாகியுள்ளதாக மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

அதன்படி, மே 26 காலை 8 மணி நிலவரப்படி இந்தியாவில் 1,009 பேருக்கு கொரனா உறுதி செய்யப்பட்டுள்ளது. அதிகபட்சமாக கேரளத்தில் 430 பேருக்கும் தமிழ்நாட்டில் 69 பேருக்கும்



தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. மீண்டும் பரவி வரும் கொரனோ பாதிப்பு காரணமாக இது வரை 7 பேர் உயிரிழந்துள்ளனர். எனினும், இது வீரியம் குறைந்த கொரோனா பரவல் என்றும், மக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அடிக்கடி உல்லாசமாக இருக்க கூறி பெண்ணை வைத்து கணவருக்கு பாலியல் தொல்லை: மீட்டு தர கோரி பெண் மனு

நாகப்பட்டினம், மே.28

நாகை மாவட்டம் பெரியதும்பூர் பகுதியை சேர்ந்த உதயஜோதி என்பவர் நாகை கலெக்டர் அலுவலகத்திற்கு உறவினர்களுடன் மனு கொடுக்க வந்தார். அவர் கலெக்டரை சந்தித்து கொடுத்த மனுவில் கூறியிருப்பதாவது:

எனது கணவர் கவாஸ்கர் கடந்த ஜனவரி மாதம் 14 ந்தேதி வேலைக்காக சவுதி அரேபியாவுக்கு சென்றார். பாலைவனத்தில் அவருக்கு ஆடு, ஒட்டகம் மேய்க்கும் வேலை கொடுத்து உள்ளனர். '

அங்குள்ள 50 வயது மதிக்கத்தக்க அரேபிய பெண்ணை வைத்து கணவருக்கு அடிக்கடி உல்லாசமாக இருக்க கூறியும் பாலியல் தொல்லையும் கொடுத்து வந்துள்ளனர். மேலும் விலங்குகளிடமும், பாலியல் தொல்லை செய்யச் சொல்லி அடித்துள்ளனர். இந்த கொடுமைகள் குறித்து என்னிடம் போனில் கூறி கதறி அழுதார். இருக்கும் இடத்தை கூட எனது கணவரால் கூற முடியவில்லை.

எனவே சவுதி அரேபியாவில் பலவிதங்களில் பாலியல் தொல்லைகளை அனுபவித்து வரும் எனது கணவரை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# கொளத்தூர் தொகுதிக்கு செல்லும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்: பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

சென்னை, மே.28

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று காலை 10 மணிக்கு சென்னையில் உள்ள தனது சொந்த தொகுதியான கொளத்தூருக்கு செல்ல உள்ளார்.

பின்னர் அங்கு நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறார்.

நிகழ்ச்சி 1. ராஜாஜி நகர் 4வது தெருவில் முதியோர் இல்லம் கட்ட முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்ட உள்ளார்.

நிகழ்ச்சி 2. ஜி.கே.எம் காலனி, ஜம்புலிங்கம் பிரதான சாலையில் அமைந்துள்ள ஹரிச்சந்திரா விளையாட்டு மைதானத்தில் அனித்தா அச்சுவர்ஸ் அகாடமியில் பயின்ற மாணவ மாணவிகள் 356 பேருக்கு தையல் இயந்திரம், 131 பேருக்கு லேப்டாப் மற்றும் கொளத்தூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ளது கண் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 100 பேருக்கு இலவச கண்ணாடிகள் ஆகியவற்றை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்க உள்ளார் .



நிகழ்ச்சி 3. ஜி.கே.எம் காலனி 24A தெருவில் புனரமைக்கப்பட்ட குளத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்.

நிகழ்ச்சி 4. கொளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் 10 ம் வகுப்பு மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 317 மாணவ மாணவிகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளார்.


நிகழ்ச்சி 5.

பெரியார் நகர் மெட்ரிகுலேஷன் பள்ளி விளையாட்டு மைதானத்தில் 150 உடல் ஊனமுற்றோருக்கு இருசக்கர வாகனங்கள் (Scooty) வழங்க உள்ளார்.

நிகழ்ச்சி 6.

புதிதாக கட்டப்பட்ட தனிகாச்சலம் கால்வாயை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்.

# குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு: சுற்றுலா பயணிகளுக்கு குளிக்க தடை



குற்றாலம், மே.28

கேரளாவில் தென் மேற்கு பருவமழை முன் கூட்டியே தொடங்கிய நிலையில், தமிழகத்தில் தென்காசி, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்து வருகிறது. மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் மலையடிவார பகுதிகளில் கனமழை பெய்தது.

நேற்று முன்தினம் இரவில் குற்றாலத்தில் அனைத்து அருவிகளிலும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டதால் சுற்றுலாபயணிகள்குளிக்க தடை விதிக்கப்பட்டது.

தொடர்ந்து நேற்று காலையிலும் குற்றாலம் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் மிதமான மழை விட்டு விட்டு பெய்தது. மேற்கு தொடர்ச்சி மலையிலும் தொடர் மழை பெய்ததால் அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. மெயின் அருவியில்பாதுகாப்புஆர்ச்சை தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்து விழுந்தது. ஐந்தருவியில் அனைத்து கிளைகளையும் மூழ்கடித்தவாறு தண்ணீர் சீறிப்பாய்ந்து சென்றது. பழைய குற்றாலம், சிற்றருவி, புலியருவியிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. எனவே அனைத்து அருவிகளிலும் சுற்றுலா பயணிகள்குளிக்க விதிக்கப்பட்ட தடை நீட்டிக்கப்பட்டது.

# காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகிறது.. எந்தெந்த மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு..?

சென்னை, மே.28

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக கன மழை முதல் மிக கன மழை கொட்டித் தீர்க்கிறது. நேற்றும், தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களில் அதி கனமழை பெய்தது. குறிப்பாக, நீலகிரி மாவட்டம் அவலாஞ்சியில் 35 செ.மீட்டர், மேல் பவானியில் 30 செ.மீட்டர் கனமழை பெய்துள்ளது.

கோவை மாவட்டம் சின்னக்கல்லாரில் 21 செ.மீட்டர், நீலகிரி மாவட்டம் எமரால்டு பகுதியில் 18 செ.மீட்டர் கனமழை பதிவானது. தற்போது, தென்மேற்கு பருவமழையின் தாக்கம் தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவி வருகிறது.



இந்நிலையில், மத்திய மேற்கு மற்றும் அதனை ஒட்டிய வடக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஒரு காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று (செவ்வாய்க்கிழமை) உருவாக வாய்ப்பு உள்ளது.

இதன் காரணமாக இன்றும் (செவ்வாய்க்கிழமை), நாளையும் (புதன்கிழமை) கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி மாவட்டத்தில் ஒரு சில இடங்களில் கன மழை முதல் மிக கன மழையும் (ஆரஞ்சு எச்சரிக்கை), திருப்பூர், திண்டுக்கல், தேனி, தென்காசி, நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று கனமழையும் பெய்ய வாய்ப்பு உள்ளது.

வருகிற 29, 30ந் தேதிகளில், கோவை மற்றும் நெல்லை மாவட்டங்களில் மலைப்பகுதிகள், நீலகிரி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழைக்கு (ஆரஞ்சு எச்சரிக்கை) வாய்ப்பு உள்ளது. திருப்பூர், தேனி, திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளது.

கோடை மழையை பொறுத்தவரையில், கடந்த மார்ச் மாதம் 1ந் தேதி முதல் நேற்று வரையில், தமிழகத்தில் 22 செ.மீட்டர் மழை பெய்துள்ளது. இந்த காலக்கட்டத்தின் இயல்பான அளவு 11 செ.மீட்டர் ஆகும். இது வரை, இயல்பைவிட 94 சதவீதம் அதிக மழை பதிவாகி உள்ளது.

# மனோன்மணியம் பல்கலை. தேர்வு ஒத்திவைப்பு: வினாத்தாள் கசிந்ததா?

நெல்லை, மே.28

தென் மாவட்டங்களில் முக்கியமான பல்கலைக் கழகமாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம் செயல்பட்டு வருகிறது. நெல்லை, தென்காசி, குமரி, தூத்துகுடி உள்பட பல மாவட்டங்களில் இந்த பல்கலைக்கழகத்தின் கீழ் 106 கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது இந்த கல்லூரிகளில் செமஸ்டர் தேர்வு நடைபெற்று வருகிறது.

அதன்படி இன்று "இன்டஸ்ட்ரியல் லா" என்ற பாடத்திற்கான தேர்வு நடைபெற இருந்தது. மாணவ, மாணவிகள் தேர்வுக்கு தயாராகி வந்தனர். இந்த நிலையில் இன்று திடீரென "இன்டஸ்ட்ரியல் லா" பாடத்தேர்வு தேர்வு ஒத்திவைக்கப்படுவதாக மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. மனோன்மணியம் பல்கலைக்கழகம் கீழ் இயங்கும் 106 கல்லூரிகளிலும் இண்டஸ்ட்ரியல் லா பாடத் தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.



வினாத்தாள் கசிந்ததால் நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழக தேர்வு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. தற்போது இன்டஸ்ட்ரியல் லா பாடத் தேர்வுக்காக கல்லூரிகளுக்கு அனுப்பப்பட்ட வினாத்தாள்களை திரும்ப பெறும் பணி நடந்து வருகிறது. மேலும் எப்படி இந்த வினாத்தாள் கசிந்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது என்று பல்கலைக்கழக நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டுள்ளது. தேர்வுக்கு மாணவ மாணவிகள் தயாராகி வந்த நிலையில் கடைசி நேரத்தில் தேர்வு ஒத்திவைக்கப்பட்டதால் ஏமாற்றமடைந்தனர்.

# திருச்செந்தூரில் திடீரென உள்வாங்கிய கடல்



திருச்செந்தூர், மே.28

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதாரபதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள், முந்திய நாட்கள், பிந்திய நாட்களில் காலையில் கடல்நீர் உள்வாங்குவதும், பின்னர் மாலையில் இயல்புநிலைக்கு திரும்புவதும் வழக்கமாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், அமாவாசை தினத்தை முன்னிட்டு நேற்று மாலையில் திடீரென கடல் நீர் உள்வாங்க தொடங்கியது. பின்னர் சுமார் 100 அடி தூரம் கடல் நீர் உள்வாங்கியது.

இதனால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன.

ஆனாலும் கோவிலுக்கு வந்த பக்தர்கள் எந்தவித அச்சமும் இன்றி பாறையில் நடந்து சென்று ஆச்சரியத்துடன் பார்த்து ரசித்தனர். மேலும் பக்தர்கள் வழக்கம்போல் கடலில் புனித நீராடி சாமி தரிசனம் செய்தனர்.

# சென்னை விமான நிலையத்தில் ரூ.70 லட்சம் மதிப்புள்ள இசிகரெட்டுகள், அமெரிக்க டாலர்கள் பறிமுதல்

சென்னை மே.28

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு விமானம் வந்தது. அந்த விமானத்தில் மலேசியாவை சேர்ந்த பெண் பயணித்தார். அவர் இந்தியாவில் சுற்றுலா பயணம் மேற்கொள்ள வந்துள்ளார்.

இந்நிலையில், விமான நிலையத்தில் சுங்கத்துறை அதிகாரிகள் வழக்கமான சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அந்த பெண் பயணி சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் செயல்பட்டதால் அவரின் உடைமைகளை அதிகாரிகள் சோதனை செய்தனர்.



அப்போது, அவர் கொண்டு வந்த பையில் இசிகரெட்டுகள், அமெரிக்க டாலர்கள் இருந்ததை அதிகாரிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து அவற்றை பறிமுதல் செய்த அதிகாரிகள் பெண் பயணியிடம் விசாரணை நடத்தினர். அப்போது, தான் இடைத்தரகர் என்றும் இந்த பொருட்களை வாங்க விமான நிலையத்திற்கு வெளியே ஒரு நபர் நிற்பதாகவும் கூறினார். இதையடுத்து விரைந்து செயல்பட்ட அதிகாரிகள் விமான நிலையத்திற்கு அருகே நின்றுகொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்தனர். அதில், மலேசியாவில் இருந்து இசிகரெட், அமெரிக்க டாலர்களை கடத்தும் கும்பலை சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. பறிமுதல் செய்யப்பட்ட இசிகரெட், அமெரிக்க டாலரின் இந்திய மதிப்பு ரூ. 70 லட்சம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.1,300 சரிவு

ஈரோடு, மே.28

தமிழகத்திலேயே ஈரோடு மாவட்டத்தில் தான் அதிகப்படியான மஞ்சள் விளைவிக்கப்படுகிறது. இதனால் ஈரோடு மஞ்சள் நகரம் என்று அழைக்கப்படுகிறது.



ஈரோடு மாவட்டத்தில் 4 இடங்களில் மஞ்சள் மார்க்கெட்டுகள் செயல்பட்டு வருகின்றன. இங்கு சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களை தவிர மற்ற நாட்களில் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

இந்தநிலையில், ஈரோட்டில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.1,300 சரிந்து ரூ.13,700க்கு விற்பனையானது. கடந்த வாரத்தில் மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.15,000 விற்கப்பட்ட நிலையில் தற்போது ரூ.13,700க்கு விற்பனையாகிறது.

# மதுரையில் ஜீன் 1ந் தேதி தி.மு.க. பொதுக்குழு: 10 ஆயிரம் பேர் பங்கேற்பு




மதுரை, மே.28

தமிழ்நாட்டில் அடுத்த ஆண்டு சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அதை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் இப்போதே தயாராகி வருகின்றன. அந்த வகையில், ஆளுங்கட்சியான தி.மு.க., மீண்டும் வெற்றிக்கனியை பறித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் காய்களை நகர்த்தி வருகிறது.

பொதுமக்களிடம் நன்மதிப்பை பெறுவதுடன், கட்சியினரையும் உற்சாகப்படுத்த தி.மு.க. தலைமை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், மதுரை உத்தங்குடியில் வருகின்ற ஜூன் 1ந்தேதி தி.மு.க. பொதுக்குழு நடைபெற இருக்கிறது. தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் 3 ஆயிரம் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்துகொள்ள இருக்கின்றனர்.

மேலும், கட்சியின் மாநில, மாவட்ட நிர்வாகிகள், அமைச்சர்கள், எம்.பி.க்கள், முக்கிய பிரமுகர்கள் என 10 ஆயிரம் பேர் பங்கேற்க இருப்பதாக கூறப்படுகிறது. அதற்கு ஏற்றவகையில் பிரமாண்ட பந்தல் அமைக்கப்பட்டு வருகிறது. மேடை மட்டும் சுமார் 100 பேர் அமரும் வகையில் தயாராகி வருகிறது.

பொதுக்குழு நிகழ்வு நடைபெறும் இடத்தின் நுழைவு வாயிலில், சென்னை தேனாம்பேட்டையில் உள்ள தி.மு.க. தலைமை அலுவலகமான அண்ணா அறிவாலயம் போல் அமைக்கப்பட்டு வருகிறது. கூட்டம் தொடங்குவதற்கு முன்பு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 100 அடி உயர கம்பத்தில் கட்சி கொடியை ஏற்றவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தற்போது வரை 80 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளன.

ஏனைய பணிகள் வேகமாக நடந்து வருகின்றன.

மேலும், தேர்தல் நெருங்கும் சமயத்தில் தி.மு.க. பொதுக்குழு கூடுவதால், அதில் பங்கேற்க வருகை தரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு ரோடு ஷோ நிகழ்ச்சி ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வரும் 31ந்தேதி சென்னையில் இருந்து மதுரைக்கு விமானத்தில் வரும் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினை, விமான நிலையத்தில் இருந்து நகரத்தின் முக்கிய பகுதிக்கு அதாவது 20 கி.மீ. தூரத்துக்கு ரோடு ஷோவாக அழைத்து செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

# வியாசர்பாடி தீ விபத்து: வீடுகளை இழந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்க வேண்டும் நயினார் நாகேந்திரன்

சென்னை, மே.28

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

வியாசர்பாடியில் 60க்கும் மேற்பட்ட வீடுகள் தீப்பற்றி சேதமடைந்துள்ளதாக வரும் செய்திகள் பதபதைக்கின்றன. நல்வாய்ப்பாக, உயிர்ச்சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை என்றும் கேள்விப்பட்டேன்.

தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுக்குள் கொண்டுவர போராடி வரும் வேளையில், வீடுகளை இழந்த மக்களுக்கு தக்க அடிப்படை வசதிகளை உடனடியாக வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் சென்று தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தமிழக பாஜக நிர்வாகிகளைக் கேட்டுக்கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

# தூத்துக்குடி: வழிப்பறி வழக்கில் 2 பேருக்கு 3 ஆண்டுகள் சிறை

தூத்துக்குடி மே.28

கடந்த 22.2.2024 அன்று தூத்துக்குடி மாவட்டம், புதுக்கோட்டை, கோரம்பள்ளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரிடம் தங்கச் செயினை வழிப்பறி செய்த வழக்கில் தூத்துக்குடி லூர்தம்மாள்புரம் பகுதியைச் சேர்ந்த நாகூர்ஹனிபா(எ) ராஜா மகன் பின்லேடன் (வயது 22) மற்றும் மணப்பாடு, மீனவர்புரத்தைச் சேர்ந்த பிரவீன் குமார் மகன் மரியயோஸ்வின்(எ) யோசுவா(22) ஆகிய 2 பேரையும் புதுக்கோட்டை காவல் நிலைய போலீசார் கைது செய்தனர். இது தொடர்பான வழக்கின் விசாரணை தூத்துக்குடி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்3ல் நடைபெற்று வந்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிபதி விஜயராஜ்குமார் இன்று (27.5.2025) பின்லேடன் மற்றும் மரியஜோஸ்வின் (எ) யோசுவா ஆகிய 2 பேருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ரூ.500 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். இவ்வழக்கை சிறப்பாகபுலனாய்வுசெய்தஅப்போதையபுதுக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர்ராமேஸ்வரி, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தர நீதிமன்றத்தில் திறம்பட வாதிட்ட சிறப்பு அரசுதரப்பு வழக்கறிஞர்கண்ணன், விசாரணைக்கு உதவியாக இருந்த ஏட்டு செல்வராஜ் ஆகியோரை மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் பாராட்டினார்.

# இந்திய அரசியலமைப்பின் அடிப்படை கொள்கைகளுக்கு அச்சுறுத்தல்: செல்வப்பெருந்தகை



சென்னை மே.28

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் சுதந்திரத்திற்குப் பிறகு, பண்டித ஜவஹர்லால் நேரு புதிய தேசம் ஒன்றை உருவாக்கும் பொறுப்பை தம் தோளில் ஏற்றார். இந்தியா எப்படி இருக்க வேண்டும், அதன் அடையாளம் என்னவாக இருக்க வேண்டுமென்ற தெளிவை கொண்டவர். அவருடைய பார்வையில் இந்தியா என்பது ஒரு ஜனநாயகமும், மதச்சார்பற்ற தன்மையுடனும், அறிவியல் மனப்பான்மையுடனும், சமத்துவத்தையும் சமூக நியாயத்தையும் நிலைநாட்டும் நாடாக இருக்க வேண்டும், கல்வி நாட்டை மாற்றும் மிக முக்கிய கருவியாக ஒரு நாட்டின் எதிர்காலத்தை கட்டமைக்கக்கூடிய சக்தியாக அவர் நம்பினார்.

இந்த உயரிய நோக்கத்துடன் அவர் தன்னுடைய தலைமையில் பல முக்கிய கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களை உருவாக்கினார். இந்தியன் இன்ஸ்டிடியூட்ஸ் ஆப் டெக்னாலஜி (IIT) உலகத் தரம் வாய்ந்த தொழில்நுட்பக் கல்வியை வழங்கும் நிறுவனங்களாக உருவாக்கப்பட்டன. மேலாண்மைத் துறையில் கற்றல் மற்றும் பயிற்சி அளிக்க இந்தியன் இன்ஸ்டிடியூட்ஸ் ஆப் மேனேஜ்மெண்ட் (IIM) உருவாக்கப்பட்டன. மருத்துவத் துறையில் உயர்தர கல்வி மற்றும் ஆராய்ச்சி வழங்கும் எய்ம்ஸ் (AIIMS), அறிவியல் வளர்ச்சிக்கு வழிவகுத்த ISRO, தொழில்நுட்ப ஆராய்ச்சிக்கான CSIR, அணு ஆய்விற்கான BARC, உயர்கல்வித் தரத்தைக் கட்டுப்படுத்தும் UGC போன்றவை அனைத்தும் நேருவால் உருவாக்கப்பட்டவை.

பண்டித நேரு அவர்கள், மத, மொழி, சாதி, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமையை வலியுறுத்தினார். இந்தியா, அனைத்து பிரிவினங்களையும் அங்கீகரிக்கும் ஒரு குடியரசாக இருக்க வேண்டும் என்றே அவர் நம்பினார். அரசு மதச்சார்பற்றதாய் இருக்க வேண்டும் என்பதே அவருடைய கோட்பாடு. சர்வதேச ரீதியிலும் இந்தியாவை வலிமையான குரலாக நிலைநாட்ட விரும்பினார். உலக வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கு எதிராக, எந்த பக்கத்திலும் இணங்காத ஒரு சுதந்திர நிலைப்பாட்டை உருவாக்கினார். இதன் வெளிப்பாடாகவே, NonAligned Movement (NAM) எனும் அமைப்பை அவர் மற்ற நாடுகளுடன் சேர்ந்து உருவாக்கினார். இந்தியா எந்த வல்லரசின் பின்னணியிலும் இல்லாமல், தன்னிச்சையான வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்ற ஆரம்பித்தது. இது நேருவின் கண்ணோட்டத்திற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற முக்கியத்துவமான நிகழ்வாகும்.

தற்போது நாட்டை இயக்கும் ஆர்.எஸ்.எஸ். ஆதிக்கத்தில் இருக்கும், நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கம், இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு உருவாக்கிய ஜனநாயக அமைப்புகள் மற்றும் கட்டமைப்புகளை முற்றிலும் சீர்குலைக்கின்றன. பண்டித நேரு அவர்கள் தன்னாட்சி மற்றும் பல்வேறு நிறுவனங்களை நிறுவி ஜனநாயகம், கூட்டாட்சி, அறிவியல் மனப்பான்மையைப் பாதுகாப்பது முக்கியம் என்று மக்களுக்கு உணர்த்தினார். திட்ட கமிஷன், தேர்தல் ஆணையம், பல்கலைக்கழக மானிய ஆணையம், இந்திய வரலாற்று ஆராய்ச்சி சபை, ஒலிபரப்புத்துறை மற்றும் சாஹித்ய அகாடெமி போன்ற நிறுவனங்கள் இவற்றின் அடிப்படையில் செயல்பட்டன.

மோடி தலைமையிலான அரசு, அதிகாரத்தை மையப்படுத்துதல், கல்வி மற்றும் பண்பாட்டுத் துறைகளில் அரசியலை புகுத்துதல், பணியாளர் நியமனங்களில் குறிப்பிட்ட சித்தாந்தத்தின் மீது நம்பிக்கை உள்ளவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். திட்ட கமிஷன் அகற்றப்பட்டு, பிரதமர் அலுவலகத்தின் கீழ் செயல்படும் நிதி ஆயோக் நிறுவப்பட்டது, தேர்தல் ஆணையத்தின் நேர்மையும் செயல்பாடுகளும் சிக்கலுக்கு உட்பட்டுள்ளன. நீதிமன்றங்களுக்கு அழுத்தம் கொடுக்கப்படுகிறது. NCERT மற்றும் ICHR போன்ற கல்வி மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளில் இந்துத்வா சிந்தனைகள் புகுத்தப்பட்டு, நேருவின் சாதனைகள் மறைக்கப்படுகின்றன.

ஊடக சுதந்திரம் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு, அரசாங்கத்தின் பணம் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு இல்லாமல் சுமூகமாக செயல்பட முடியாத நிலை உள்ளது. பொதுமக்களுக்கு ஒலிபரப்புத் துறையினால் பரப்பப்பட வேண்டிய செய்திகள் அரசாங்கத்தின் விருப்பத்தை மெய்ப்பிக்கும் கருவியாக மாற்றப்பட்டுள்ளது. அமலாக்கத்துறை, வருவாய்த் துறை மற்றும் புலனாய்வுத்துறை போன்றவற்றின் தவறான பயன்பாடுகளினால் மக்கள் மனதில் அச்சம் மற்றும் பயத்தை உருவாக்கியுள்ளனர்.

பண்டித நேருவும், மகாத்மா காந்தியும், அண்ணல் அம்பேத்கரும் உருவாக்கிய இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளுக்கும், அவர்கள் கட்டி எழுப்பிய சமத்துவம், ஒற்றுமை, முன்னேற்றம் என்ற நாட்டின் அடிப்படைக் கொள்கைகளுக்கும் இன்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் பாரத் ஜோடோ போன்ற சீரிய நடவடிக்கைகளால் இந்திய சமூகத்தில் ஒற்றுமை, நீதி மற்றும் அரசியலமைப்புப் பெருமைகளை காக்கும் எழுச்சிமிகு தலைவராக விளங்கி வருகிறார். இது ஒரு அரசியல் பயணம் மட்டும் அல்ல, ஆர்.எஸ்.எஸ். கொள்கைக்கு எதிரான நடவடிக்கை மற்றும் பண்டித நேரு கனவு கண்ட ஒருங்கிணைந்த சமத்துவமிக்க இந்தியாவை கட்டியெழுப்புகின்ற நடவடிக்கையாகும். இதில் நாம் அனைவரும் அன்னை சோனியா காந்தி, தலைவர் ராகுல் காந்தி, தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே ஆகியோருடன் இணைந்து, பண்டித நேரு அவர்களால் உருவாக்கப்பட்ட இந்தியாவை கட்டிக்காக்க அவரது நினைவுநாளில் உறுதியேற்போம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஐஸ்கிரீம் கொட்டியதில் மாமியாருக்கும் மருமகளுக்கும் தகராறு: இளம்பெண் எடுத்த விபரீத முடிவு



சென்னை, மே.28

சென்னை அடுத்த செங்குன்றம் மொண்டி அம்மன் நகரை சேர்ந்தவர் அஸ்வின்ராஜ் (30). இவரது மனைவி அனுப்பிரியா (27) இருவரும் கடந்த 2 1/2 வருடங்களாக காதலித்து பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஒரு வயதில் குழந்தை உள்ளது.

வீட்டில் உள்ள பிரிட்ஜில் இருந்த ஐஸ்கிரீம் கீழே கொட்டியதாக தெரிகிறது. இதனால் அனுப்பிரியாவை அவரது மாமியார் இதையெல்லாம் சரியாக கவனிக்கமாட்டாயா? என கேட்டு கண்டித்ததாக கூறப்படுகிறது.

இதில் அவர்களுக்கு இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதனால் அனுப்பிரியா மனவேதனை அடைந்தார். வீட்டில் யாரும் இல்லாத போது திடீரென அவர் மின் விசிறியில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். சிறிது நேரம் கழித்து அஸ்வின்ராஜ் வீட்டுக்கு வந்தபோது காதல் மனைவி அனுப்பிரியா தூக்குப்போட்டு தற்கொலை செய்து இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

இது குறித்து செங்குன்றம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் பொன்னேரி ஆர்.டி.ஓ விசாரணையும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மாமியார் திட்டியதால் இளம்பெண் அனுப்பிரியா தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது. அனுப்பிரியாவின் விபரீத முடிவால் ஒரு வயது குழந்தை தற்போது அம்மா இல்லாத நிலைக்கு ஆளாகியுள்ளது.

# திருநெல்வேலியில் 1 கிலோ கஞ்சா பறிமுதல்: 2 பேர் கைது




திருநெல்வேலி மே.28

திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை பகுதியில் சப்இன்ஸ்பெக்டர் ஆண்டோ பிரதீப் தலைமையிலான காவல் துறையினர் ரோந்து பணியில் ஈடுபட்டனர். அப்போது, உபகார மாதபுரம் அருகே சந்தேகப்படும்படி நின்று கொண்டிருந்த திசையன்விளையைச் சேர்ந்த முத்து இசக்கி (வயது 19) மற்றும் கண்ணன்(23) ஆகிய 2 பேரையும் போலீசார் சோதனை செய்தனர். அதில் அவர்கள் அரசால் தடை செய்யப்பட்ட மனித உயிருக்கு தீங்கு விளைவிக்ககூடிய 1 கிலோ 100 கிராம் கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து சப்இன்ஸ்பெக்டர் அவர்கள் 2 பேரையும் காவல் நிலையம் அழைத்து சென்றார். இதுகுறித்து திசையன்விளை போலீஸ் இன்ஸ்பெக்டர் சீதாலெட்சுமி வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு முத்து இசக்கி மற்றும் கண்ணன் ஆகிய 2 பேரையும் நேற்று கைது செய்து நடவடிக்கை எடுத்தார். மேலும் அவர்களிடமிருந்து 1 கிலோ 100 கிராம் கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர்.

திருநெல்வேலி மாவட்டத்தில் போதை பழக்கத்தை குறைக்கும் நோக்கத்தோடு, திருநெல்வேலி மாவட்ட காவல் துறையினர் கஞ்சா, குட்கா போன்ற போதை பொருட்களை விற்பனை செய்பவர்கள் மீது தனி கவனம் செலுத்தி தீவிரமாக கண்காணித்து வருகின்றனர். இதுபோன்ற போதை பொருள்களை விற்பனை செய்பவர்கள் மீதும், வாங்குபவர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் வலியுறுத்தியுள்ளார்.

# திருநெல்வேலி: ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து விழிப்புணர்வு



திருநெல்வேலி, மே.28

திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் அறிவுறுத்தலின்படி, காவல் துறையினர் பொது மக்களுக்கு தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். அதன்படி, முக்கூடல் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கும், ஆட்டோ ஓட்டுநர்களுக்கும் முக்கூடல் சிறப்பு சப்இன்ஸ்பெக்டர் மாபு ஜாண் சாலை பாதுகாப்பு விதிமுறைகள் குறித்தும், பேருந்தில் படிக்கட்டில் பயணம் செய்வதால் ஏற்படும் விளைவுகள் பற்றியும், அதிவேகம் மற்றும் போதையில் வாகனம் ஓட்டுபவர்களால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றியும் எடுத்துக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மேலும் திருநெல்வேலி மாவட்ட காவல் துறையினர், மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் நாள்தோறும் பொது மக்களை நேரில் சந்தித்து, புகையிலை மற்றும் கஞ்சா பயன்படுத்துவதால் ஏற்படும் தீங்கு பற்றியும் அதனால் ஏற்படும் பின்விளைவுகள் பற்றியும் மக்களிடம் எடுத்துக்கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துகின்றனர்.


# நடுவானில் பயணிக்கு உடல்நலக்குறைவு: அவசர அவசரமாக சென்னையில் தரையிறங்கிய விமானம்

சென்னை மே.28

சென்னையில் இருந்து இன்று காலை 5.40 மணிக்கு உத்தரபிரதேசத்தின் லக்னோவுக்கு இண்டிகோ விமானம் புறப்பட்டது. அந்த விமானத்தில் 160 பயணிகள் பயணித்தனர்.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது விமானத்தில் இருந்த ஒரு பயணிக்கு திடீரென உடல்நலக்குறைவு ஏற்பட்டது. இது குறித்து விமானிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. உடனடியாக விமானி விமானத்தை சென்னையில் அவசர அவசரமாக தரையிறக்கினார். காலை 6.30 மணிக்கு விமானம் சென்னையில் தரையிறக்கப்பட்டு உடல்நலம் பாதிக்கப்பட்ட பயணி உடனடியாக மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். இதையடுத்து, காலை 7.20 மணிக்கு விமானம் மீண்டும் லக்னோ புறப்பட்டு சென்றது.

# கிருஷ்ணகிரி: இன்ஸ்டாகிராமில் மலர்ந்த காதலை பிரித்ததால் சிறுமி தற்கொலை




கிருஷ்ணகிரி, மே.28

நாமக்கல்லை சேர்ந்த இளைஞருடன் இன்ஸ்டாகிராம் மூலம் காதல் வயப்பட்ட கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகேயுள்ள பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுமி, ஏப்ரல் 8ம்தேதி வீட்டை விட்டு வெளியேறினார். இதனை தொடர்ந்து 18 வயது பூர்த்தி அடையாத நிலையில், பெற்றோருடன் செல்ல மறுத்த சிறுமி காப்பகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டார். பின்னர் கடந்த 22ம்தேதி சிறுமியை சமாதானம் செய்து பெற்றோர் வீட்டிற்கு அழைத்து சென்றனர். இந்நிலையில் வீட்டில் யாரும் இல்லாத நேரம் பார்த்து அந்த சிறுமி தூக்குப்போட்டு தற்கொலை செய்தார். இதைக் கண்ட சிறுமியின் பெற்றோர் அதிர்ச்சி அடைந்தனர்.

# மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தமிழக அரசு துரிதப்படுத்த வேண்டும்: டிடிவி தினகரன்



சென்னை, மே.28

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,


தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை முன்கூட்டியே தொடங்கியிருக்கும் சூழலில் கோவை மற்றும் நீலகிரியில் கடந்த மூன்று நாட்களாக பெய்து வரும் தொடர் மழையால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கியிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கோவை, நீலகிரி உள்ளிட்ட பல மாவட்டங்களில் கனமழை பெய்வதற்கான எச்சரிக்கையை விடுத்திருக்கும் வானிலை ஆய்வு மையம், வங்கக் கடலில் இன்று புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகும் எனவும் கணித்து அதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

ஏற்கனவே நொய்யல், பவானி, ஆழியாறு உள்ளிட்ட பல்வேறு ஆறுகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கும் நிலையில், மேலும் கனமழை பெய்ய வாய்ப்பிருப்பதால் ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களை அங்கிருந்து வெளியேற்றி பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் மேற்கொள்வதை தமிழக அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும், வானிலை ஆய்வு மையத்தின் எச்சரிக்கைகளை முறையாக பின்பற்றி, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, கனமழையால் மக்கள் பாதிக்கப்படும் போது மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளையும் துரிதப்படுத்திட வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார்.

# வைகாசி அமாவாசை: தர்மபுரி ஆஞ்சநேயர் கோவில்களில் சிறப்பு வழிபாடு



தர்மபுரி மே.28

தர்மபுரி எஸ்.வி,ரோடு ஸ்ரீ அபய ஆஞ்சநேய சாமி கோவிலில் வைகாசி மாத அமாவாசையையொட்டி சாமிக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் ஆராதனை நடைபெற்றது. பின்னர் சாமிக்கு சிறப்பு அலங்கார சேவையும், மகா தீபாராதனையும் நடைபெற்றது . இந்த வழிபாட்டில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இதேபோல் தர்மபுரி ஹரிஹர நாத சுவாமி கோவில் தெருவில் உள்ள தாஸ ஆஞ்சநேயர் கோவிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாட்டில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

தர்மபுரி மாவட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற வே.முத்தம்பட்டி வீர ஆஞ்சநேய சாமி கோவிலில் வைகாசி மாத அமாவாசையையொட்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதில் தர்மபுரி மாவட்டம் அல்லாது பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

தொப்பூர் மன்றோ குளக்கரை ஆஞ்சநேயர் கோவிலிலும் வைகாசி மாத அமாவாசையையொட்டி சிறப்பு வழிபாடு நடைபெற்றது. இதையொட்டி சாமிக்கு பல்வேறு சிறப்பு ஆராதனை மற்றும் பூஜைகள் நடைபெற்றது. பின்னர் சாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இதில் சேலம் தர்மபுரி தேசிய நெடுஞ்சாலை வழியாக சென்ற ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்.

குப்புசெட்டிபட்டி விஸ்வரூப ஆஞ்சநேயர் கோவில், சோகத்தூர் வீர தீர ஆஞ்சநேயர் சாமி கோவில், கெரகோடஅள்ளி ஆஞ்சநேயர் கோவில் மற்றும் மாவட்டத்திலுள்ள அனைத்து ஆஞ்சநேயர் கோவில்களிலும் வைகாசி மாத அமாவாசையை முன்னிட்டு சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. பக்தர்களுக்கு சிறப்பு பிரசாதம் வழங்கப்பட்டது.

# 8 ஆண்டுகளுக்குப் பின் மஞ்சமலை அய்யனார் கோவில் புரவி எடுப்பு உற்சவ விழா



மதுரை மே.28

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மிகவும் பிரசித்திபெற்ற கோவில்களில் ஒன்று மதுரை மாவட்டம் பாலமேடு அருகே வலையபட்டி ஜமீன் கிராமத்தில் அமைந்துள்ள மஞ்சமலை அய்யனார், ஈரடி கருப்பு சாமி திருக்கோவில். இக்கோவிலில் 8 ஆண்டுகளுக்கு பிறகு குதிரை எடுப்பு உற்சவ திருவிழா நேற்று மாலையில் விமரிசையாக நடந்தது.

விழாவையொட்டி, அரசம்பட்டி மந்தை திடலில் இருந்து ஸ்ரீ மஞ்சமலை அய்யனார், ஈரடி கருப்பு சாமி உள்ளிட்ட பல்வேறு பரிவார தெய்வங்களின் சிலைகள்,

குதிரை சிலைகள் மேலும் பல்வேறு வண்ணமயமான சிலைகள் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டன. பின்னர் சுவாமிக்கு கண் திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேகம், அர்ச்சனை, தீபாராதனை நடந்தது.

சுற்று வட்டார கிராமங்கள் மட்டுமின்றி, வெளி மாவட்டங்களை சேர்ந்த பக்தர்கள் ஏராளமானோர் தங்களது வேண்டுதல் நிறைவேறியதையொட்டி குதிரைகள், காளைகள் மற்றும் சுவாமி சிலைகள், குழந்தை பொம்மை சிலைகள், பைரவர், வீடு, ஆட்டோ, உள்ளிட்ட பல்வேறு வகையான சிலைகளை ஊர்வலமாக எடுத்து வந்து வழிபட்டனர்.

# 2ம் தேதி பள்ளிகள் திறப்பு : வழிகாட்டு நெறிமுறைகள் வெளியீடு




சென்னை, மே.28

1 முதல் 12ம் வகுப்பு வரை அனைத்து மாணவர்களுக்கும் வரும் 2ம் தேதி (ஜூன்) பள்ளிகள் திட்டமிட்டப்படி திறக்கப்படும் என பள்ளிக்கல்வித்துறை அறிவித்துள்ளது. மேலும், பள்ளி கல்வித்துறை வழிகாட்டு நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

அதில், முதல் அமைச்சரின் காலை உணவு திட்டம் அனைத்து மாணவர்களுக்கும் தரமாகவும், தாமதமின்றியும் வழங்குவதை உறுதி செய்ய வேண்டும். மதிய உணவு இடைவேளை முடிந்து சிறார் பருவ இதழ் படிக்க வைக்க வேண்டும். மாணவர்களுக்கு பள்ளி வளாகத்தை தூய்மை செய்வது, வாரம் ஒரு முறை நன்னெறி வகுப்பு நடத்த வேண்டும். செவ்வாய் கிழமைகளில் 612 வகுப்பினருக்கு போதைப்பொருள் எதிர்ப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் போன்ற நெறிமுறைகள் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253
28.5.2025

# உதகையில் அனைத்து சுற்றுலா தலங்களும் ஒருநாள் மூடல்



நீலகிரி, மே.28

கோவை, நீலகிரி மாவட்டங்களில் அதிகனமழைக்கான ரெட் அலர்ட் விடுக்கப்பட்டு இருந்தது. இதையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அந்தந்த மாவட்ட நிர்வாகங்கள் தீவிரப்படுத்தின. கோவை, நீலகிரி மாவட்டங்களில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது.

இந்த நிலையில் கனமழை காரணமாக உதகையில் உள்ள அனைத்து சுற்றுலா தலங்களும் இன்று ஒருநாள் மூடப்படுகிறது என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா, உதகை, பைக்காரா படகு இல்லம் என அனைத்து சுற்றுலா தலங்களும் மூடல். தொட்டபெட்டா காட்சி முனை, பைன் பாரஸ்ட், சூட்டிங் மட்டம், பைக்காரா நீர் வீழ்ச்சி மூடல். அவலாஞ்சி சூழல் சுற்றுலா மையம், டால்பின் நோஸ், லேம்ஸ் ராக் சுற்றுலா தலங்களும் மூடப்படுகிறது.

# சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் 1,373 பொது இசேவை மையங்கள்: செய்தியாளர் பயணத்தின் போது கலெக்டர் ஆய்வு



சேலம், மே.28

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கத்தில் செயல்பட்டு வரும் இசேவை மையத்தில் மாவட்ட கலெக்டர் இரா.பிருந்தாதேவி, செய்தியாளர் பயணத்தின் போது ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்விற்குப்பின், மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கத்தின் சார்பில் செயல்பட்டு வரும் இசேவை மையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பொதுமக்கள் பல்வேறு அரசுத் துறையின் சேவைகளை எவ்வித சிரமமும் இன்றி விரைவாக பெற்று பயனடைந்திடும் வகையில் சேலம் மாவட்டம் முழுவதும் 1,373 இசேவை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சார்பில் செயல்பட்டுவரும் 19 அரசு இசேவை மையங்களில் 3,73,465 நபர்களும், 197 தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களின் இசேவை மையங்களில் 4,29,940 நபர்களும், மகளிர் திட்டத்தின் சார்பில் 94 இசேவை மையங்களில் 1,67,661 நபர்களும், 1,060 தனியார் இசேவை மையங்களில் 6,71,271 நபர்களும் மற்றும் கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் சார்பில் ஒரு இசேவை மையத்தில் 31 நபர்களும் என மொத்தம் மாவட்டம் முழுவதும் கடந்த 4 ஆண்டுகளில் 1,373 பொது இசேவை மையங்கள் மூலம் 16,43,320 நபர்கள் பயனடைந்துள்ளனர். இசேவை மையங்கள் மூலம் பொது மக்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் மின் ஆளுமை திட்டத்தின் கீழ் சாதிச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், உட்பிரிவுசிட்டா பிரித்தல் உள்ளிட்ட சேவைகளும் வழங்கப்படுகிறது.

இவை தவிரமின் கட்டணம் செலுத்துதல், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் புதிய குடும்ப அட்டை விண்ணப்பித்தல், குடும்ப அட்டையில் முகவரி மாற்றம் செய்தல், நவீன குடும்ப அட்டை அச்சிடுதல், ஜீவன் பிரமான் சான்றிதழ் மற்றும் தேர்தல் ஆணையத்தின் வண்ண வாக்காளர் அடையாள அட்டை உள்ளிட்ட 260 வகையான சேவைகளை ஒரே இடத்தில் தமிழ்நாடு அரசு இ சேவை மையங்கள் மூலமாக பொதுமக்கள் எளிதாகப் பெற்றுப் பயனடையலாம். இவ்வாறு மாவட்ட கலெக்டர் பிருந்தாதேவி, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

# அசுத்தமான குடிநீர்.. மக்களின் உயிருக்கு யார் பொறுப்பு..? நயினார் நாகேந்திரன் கேள்வி



சென்னை, மே.28

தமிழ்நாடு மாநில பா.ஜ.க. தலைவர்நயினார் நகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: திருநெல்வேலி, தென்காசி மற்றும் விருதநகர் ஆகிய தென் மாவட்டங்களுக்கு கூட்டு குடிநீர் திட்டங்களின் (cwsss) கீழ் வழங்கப்படும் குடிநீரானது மாசுபட்டிருப்பதாகவும், உறை கிணறுகளுக்கு பதிலாக தாமிரபரணி ஆற்றில் இருந்து நேரடியாக எடுக்கப்படும் குடிநீரால் மக்கள் அவதியுறுவதாகவும் வெளியாகி உள்ள செய்திகள் மிகுந்த மன வேதனையளிக்கின்றன.

இயற்கையாகவே அசுத்தங்களை வடிகட்டி குடிநீரை சுத்திகரிக்கும் அமைப்பு கொண்ட உறை கிணறுகள், நிறந்தவெளி மலம் கழித்தல், கழிவுகளை கொட்டுதல் மட்டுமன்றி ஒப்பந்ததாரர்களின் மெத்தனப்போக்கால் முற்றிலுமாக சேதமடைந்திருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ள தகவல். திராவிட மாடல் அரசின் நிர்வாகக் குளறுபடிகளைத் தோலுரித்துக் காட்டுகிறது.

ஆனால் குழாய்ப் போக்குவரத்து மூலம் குடிநீரில் உள்ள கழிவுகள் வடிகட்டப்படுகின்றன எனவும், ஆற்றிலிருந்து நேரடியாகக் குடிநீர் பெறப்படுவது தற்காலிகமானது தான் எனவும் வாய்க்கு வந்ததைக் கூறி தங்கள் நிர்வாகத்தின் மீதுள்ள புகார்களை மூடி மறைக்க முயலும் திமுக அரசு, அசுத்தமான குடிநீரைக் குடித்து மக்களின் உயிருக்கும் ஆரோக்கியத்திற்கும் பாதிப்பு ஏற்பட்டால் முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளுமா..?

கடந்த சில மாதங்களுக்கு முன்பு பல்லாவரத்தில் கழிவுநீர்கலந்தகுடிநீரால்3பேர்உயிரிழந்தசோகத்தையே தமிழகம் இன்னும் மறக்கவில்லை. ஆனால் அத்தகைய துயர விபத்திலிருந்து எந்தப் பாடங்களையும் கற்றுக் கொள்ளாமல் அப்பாவி மக்களின் உயிரை இந்த ஆளும் அறிவாலய அரசு இப்படி அலட்சியப்படுத்துவது ஏன்? கோடை வெயில் வாட்டி வதைக்கையில் சுத்தமான குடிநீருக்குதட்டுப்பாடு நிலவுவது ஆபத்தானதல்லவா?

உரிமைகளைப் பற்றி மேடைக்கு மேடை பிறருக்கு வகுப்பெடுக்கும் தமிழ்நாடு முதல்அமைச்சர் ஸ்டாலின் அவர்களுக்கு, குழநீர் என்பது ஒரு குடிமகனின் அடிப்படை உரிமை என்பதும் அதை முறையாக மக்களுக்கு வழங்க வேண்டியது ஆளும் அரசின் கடமை என்பதும் தெரியாதா?

எனவே இதுகுறித்த உயர்மட்ட விசாரணையை உடனடியாகத் துவங்குவதோடு, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் செயல்பாட்டையும் சீர் செய்து மக்களுக்கு சுத்தமான குடிநீர் தங்கு தடையின்றி கிடைப்பதையும்உறுதிசெய்யவேண்டுமென்தமிழ்நாடு முதல்அமைச்சரை வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (28.5.2025)




இன்று உங்களுக்கு வரவிற்கேற்ற செலவுகள் இருக்கும். குடும்பத்தில் உள்ளவர்களால் நிம்மதி குறைவு ஏற்படும். தொழில் வியாபார ரீதியாக எடுக்கும் முயற்சிகளில் சற்று சிந்தித்து செயல்பட்டால் சாதகமான பலனை அடையலாம். உற்றார் உறவினர்கள் வழியில் அனுகூலங்கள் உண்டாகும்.




இன்று குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் நிகழ்வுகள் நடைபெறும். வீட்டிற்கு தேவையான பொருள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பல போட்டிகளுக்கு இடையே வெற்றி ஏற்படும்.




இன்று குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் விஷயங்கள் நடைபெற்றாலும் வீண் செலவுகளும் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் மந்த நிலை உண்டாகும். எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருந்த பிரச்சினைகள் ஓரளவு குறையும். ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று உங்களுக்கு திடீர் தனவரவு உண்டாகும். உடன்பிறந்தவர்களால் அனுகூலம் கிட்டும். வீட்டு தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் சக நண்பர்களின் அதரவு கிடைக்கும். கடன் பிரச்சினை தீரும். தொழில் வியாபாரத்தில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.




இன்று பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் சுறுசுறுப்பாக இருப்பார்கள். சொந்த தொழில் செய்பவர்களுக்கு அனுகூலமான பலன்கள் உண்டாகும். அரசு துறையில் பணிபுரிபவர்களுக்கு கௌரவ பதவிகள் கிட்டும். நினைத்த காரியம் நிறைவேறும்.





இன்று குடும்பத்தில் உள்ளவர்களுடன் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் தோன்றும். திடீர் பயணங்களால் அலைச்சல் சோர்வு உண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் சிறு தடைக்குப் பின் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களை அனுசரித்து செல்வது உத்தமம்.




இன்று உங்கள் ராசிக்கு பகல் 01.36 வரை சந்திராஷ்டமம் இருப்பதால் எதிர்பார்த்த பணவரவுகள் தாமதமாக கிடைக்கும். ஆரோக்கிய ரீதியாக சிறு சிறு மருத்துவ செலவுகள் செய்ய நேரிடும். உடன் பிறந்தவர்களிடம் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது, எதிலும் பொறுமையோடு இருப்பது நல்லது.





இன்று உங்கள் ராசிக்கு பகல் 01.36 முதல் சந்திராஷ்டமம் தொடங்குவதால் மனஉளைச்சல் அதிகமாகும். எடுத்த காரியம் பாதியில் தடைப்படும். எந்த ஒரு விஷயத்திலும் அவசரம் காட்டாமல் பொறுமையோடு செயல்படுவது உத்தமம். முடிந்த வரை இரவு நேர பயணங்களை தவிர்ப்பது நல்லது.




இன்று உங்கள் மனதிற்கு புது தெம்பு கிடைக்கும். உயர் அதிகாரிகளின் ஆதரவால் உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். தொழில் ரீதியாக பெரிய மனிதர்களின் சந்திப்பு மனதிற்கு மகிழ்ச்சியை தரும். வெளியிலிருந்து வர வேண்டிய பணவரவுகள் தடையின்றி வந்து சேரும். சுபகாரியம் கைகூடும்.




இன்று உத்தியோக ரீதியான பயணங்களால் மனஉளைச்சல் அதிகரிக்கும். தொழில் ரீதியாக எடுக்கும் புதிய முயற்சிகளுக்கு உடனிருப்பவர்களால் தடைகள் ஏற்படலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் உண்டாகும். பெரியவர்களின் ஆலோசனைகளால் தொழில் வியாபாரத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படும்.




இன்று உங்களுக்கு மனதில் குழப்பமும் கவலையும் இருக்கும். தேவையில்லாத பிரச்சினைகள் உங்களைத் தேடி வரும். எந்த விஷயத்திலும் நிதானத்துடன் செயல்பட்டால் சாதகமான பலன்களை அடையலாம். உத்தியோகத்தில் உடனிருப்பவர்களிடம் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது உத்தமம்.




இன்று நீங்கள் எந்த செயலிலும் மனமகிழ்ச்சியுடன் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் கைகூடும். உடன்பிறந்தவர்கள் ஆதரவாக இருப்பார்கள். உத்தியோகஸ்தர்களுக்கு வேலையில் புதிய வாய்ப்புகள் கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் பொறுப்புடன் செயல்படுவார்கள்.



மதுரைமாவட்டம்அலங்காநல்லூர்பேரூராட்சிக்குட்பட்டவலசைகிராமத்தில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கிரிக்கெட்போட்டி நடைபெற்றது. இந்த போட்டியில் 33 அணிகள் பங்கேற்றன. இதில் முதல் பரிசு கீழச்சின்னணம்பட்டி அணி, இரண்டாம் பரிசு அழகர்கோவில் அணி, மூன்றாம் பரிசு வலசை அணி, நன்காம் பரிசு வலசை அணி கைப்பற்றின.

# மாமன் படத்தின் வசூல் இத்தனை கோடியா?




தமிழ் சினிமாவில் ஆரம்பத்தில்காமெடி கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வந்தவர் நடிகர் சூரி. வெற்றி மாறன் இயக்கிய 'விடுதலை பாகம் 1' படத்தில் முதல் முறையாக கதாநாயகனாக அறிமுகமானார். அவரது நடிப்பு மக்களை வெகுவாக கவர்ந்தது. அதனை தொடர்ந்து, 'கருடன், கொட்டுக்காளி' , 'விடுதலை பாகம் 2 ஆகிய படங்களில் கதாநாயகனாக நடித்தார்.

அதனை தொடர்ந்து சூரியின் நடிப்பில் 'மாமன்' படம் வெளியானது. இதனை விலங்கு வெப் தொடரை இயக்கி புகழ்பெற்ற பிரசாந்த் பாண்டிராஜ் இயக்கியுள்ளார். லார்க் ஸ்டுடியோஸ் தயாரித்துள்ள இப்படத்தில் ஐஸ்வர்யா லட்சுமி, ஸ்வாசிகா, ராஜ்கிரண், பாலா சரவணன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர்.

குடும்ப உறவுகளின் பின்னணியில் உருவாகியுள்ள இப்படம் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இந்த நிலையில் இப்படத்தின் வசூல் குறித்த விவரம் வெளியாகி உள்ளது. அதன்படி, இப்படம் 10 நாளில் ரூ.25 கோடி வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. மதிமாறன் புகழேந்தி இயக்கத்தில் சூரி தனது அடுத்த படத்தில் நடிக்க உள்ளார். எல்ரட் குமாரின் ஆர்.எஸ். இன்போ நிறுவனம் தயாரிக்கும்'மண்டாடி' படத்தில் மகிமா நம்பியார் கதாநாயகியாக நடிக்கிறார். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைக்கிறார்

# தர்ஷன் நடித்த சரண்டர் படத்தின் டீசர் ரிலீஸ் தேதி அறிவிப்பு




அப்பிட் பிக்சர்ஸ் நிறுவனம் தனது முதல் பிரமாண்ட படைப்பாக சரண்டர் திரைப்படத்தை பெருமையுடன் வழங்க இருக்கிறது. கிரைம்ஆக்சன் திரில்லராகவும் உணர்வுப் பூர்வமாகவும் உருவாகியுள்ள இந்தப் படம், தமிழ் சினிமாவில் முற்றிலும் புதுமையான அனுபவத்தை கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. படத்தின் தலைப்பு மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது.

விக்டர் குமார் தயாரிப்பில் உருவாகும் சரண்டர், அருமையான திரையரங்க அனுபவம் கொடுக்கும் என பட குழு நம்பிக்கை கொடுக்கிறது. திரைக்கதை, இயக்கம் கவுதமன் கணபதி . இவர் பிரபல இயக்குநர் அறிவழகன் உடன் துணை இயக்குனராக பணியாற்றியிருக்கிறார். தற்போது சரண்டர் படத்தின் மூலமாக இயக்குனராக அறிமுகமாகவிருக்கிறார். படத்தின் கதாநாயகனாக தர்ஷன் முதன்முறையாக போலீஸ் அதிகாரியாகநடிக்கிறார். அவரதுதீவிரமானநடிப்பு, கதாபாத்திரத்துக்குஉயிர்கொடுத்திருக்கிறது எனஇயக்குநர் பெருமிதத்துடன் கூறுகிறார்.

அதுமட்டுமல்ல, லால், சுஜித் சங்கர், முனிஷ்காந்த், மன்சூர் அலிகான், பதினே குமார் உள்ளிட்ட திறமையான நடிகர்கள் இப்படத்தில் முக்கியக் கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இந்தப் படத்திற்காக, பிரபல இசையமைப்பாளர் விகாஸ் பதீசா தமிழில் முதல் முறையாக இசையமைக்கிறார். பிரபல இசையமைப்பாளர்களான தேவி ஸ்ரீ பிரசாத் உட்பட பலருடன் பணியாற்றிய இவர், தனித்துவமான இசை அமைப்புகளுக்காக பாராட்டப்பட்டவர். படப்பிடிப்பு வெற்றிகரமாக நிறைவடைந்து, தற்போது சரண்டர் திரைப்படம் போஸ்ட் புரொடக்ஷன் பணிகளில் இருக்கிறது. இந்நிலையில் தர்ஷன் நடித்த "சரண்டர்" படத்தின் டீசர் வரும் 28ம் தேதி வெளியாக உள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது. தமிழ் சினிமாவில் விறுவிறுப்பான புதிய அனுபவத்தை வழங்கும் இந்தப் படம் விரைவில் திரையரங்குகளில் வெளியாகும்.


# நான் ஐஸ்வர்யா ராயை பார்த்து வளர்ந்தவள் ஆலியா பட்



78ஆவது கேன்ஸ் திரைப்பட விழா பிரான்ஸ் நாட்டின் கேன்ஸ் நகரில் நடைபெற்றது. அதில் உலகம் முழுவதும் இருந்து திரைத் துறை பிரபலங்கள், ரசிகர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டுள்ளனர். ஆஸ்காருக்கு அடுத்தபடியாக உலக பிரசித்தி பெற்ற கேன்ஸ் திரைப்பட விழாவில் இந்திய திரைப்பிரலங்களான ஐஸ்வர்யா ராய், ஜான்வி கபூர், ஆலியா பட், ஊர்வசி ரவுத்தேலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிலையில், சமீபத்தில் பேட்டி ஒன்றில் கலந்து கொண்ட நடிகை ஆலியா பட், கேன்ஸ் திரைப்பட விழாவில் கலந்து கொண்டது குறித்தும், நடிகை ஐஸ்வர்யா ராயை குறித்தும் பேசியுள்ளார். அதாவது, "இப்போதெல்லாம்நாம்அனைவரும்பிரபலங்கள்சிவப்புகம்பளத்தில் நடந்து வருவதை செல்போனில் பார்க்கிறோம். நான் இதேபோல் ஐஸ்வர்யா ராய் நடந்து வருவதை பார்த்து வளர்ந்தவள். அவர் அழகுடன் இந்தியாவை பிரதிநிதித்துவப் படுத்துவது உத்வேகமாக இருக்கும். நானும் அதே போல் இருப்பது மகிழ்ச்சி" என அந்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# சிஎஸ்கே அணியின் நலனுக்காக தோனி இதை செய்ய வேண்டும் இந்திய முன்னாள் வீரர்



10 அணிகள் இடையிலான 18வது ஐ.பி.எல். தொடர் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் 5 முறை சாம்பியனான சென்னை சூப்பர் கிங்ஸ் வழக்கத்திற்கு மாறாகதடுமாற்றமாக செயல்பட்டு வரலாற்றில் முதல் முறையாக புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்து பரிதாபமாக வெளியேறியது.

முன்னதாக நடப்பு சீசனின் தொடக்க கட்டத்தில் சில போட்டிகளில் ஆடிய சென்னை அணியின் கேப்டனான ருதுராஜ் கெய்க்வாட் காயம் காரணமாக தொடரிலிருந்து விலகினார். இதனால் சென்னை அணியின் கேப்டனாக மீண்டும் மகேந்திரசிங் தோனி நியமிக்கப்பட்டார். ஆனால் அவரது தலைமையிலும் சுமாரான ஆட்டத்தை வெளிப்படுத்திய சென்னை அணி புள்ளி பட்டியலில் கடைசி இடத்தை பிடித்தது.

இதனிடையே தோனி அடுத்த சீசனில் விளையாடுவாரா? இல்லையா? என்ற சந்தேகம் ரசிகர்கள் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் ஓய்வு குறித்து முடிவெடுப்பதற்கு இன்னும் நிறைய நேரம் உள்ளது என்று தோனி கூறினார்.

இந்நிலையில் சிஎஸ்கே அணியின் நலனுக்காக தோனி இந்த வருடத்துடன் ஓய்வு பெற வேண்டும் என்று இந்திய முன்னாள் வீரரான முரளி கார்த்திக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "சில விஷயங்கள் நிற்கக் கூடாது என்று நாம் விரும்புவது போல தோனி விளையாடும் வரை உலகம் பார்க்க விரும்பும். ஆனால் சில நேரங்களில் நீங்கள் விரும்பக்கூடியவர் வரவேற்பில் அதிகம் இருக்கக் கூடாது என்று சொல்ல வேண்டிய நிலை வரும். தோனி அல்லது யாராக இருந்தாலும் ஓய்வு பற்றி சிந்திக்க வேண்டும்.

தற்போது விராட் கோலி டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்று விட்டார். இப்போது 36 வயது மட்டுமே நிரம்பியுள்ள உங்களிடம் இன்னும் 2 3 வருடம் இருக்கிறது என்று விராட் கோலியிடம் அனைவரும் சொல்கின்றனர்.

ஆனால் தோனியை பொறுத்த வரை அவருடைய மனதில் என்ன இருக்கிறது என்பதை நாம் கண்டறிவது கடினம். ருதுராஜிடம் கேப்டன்ஷிப் கொடுக்கப்பட்டதால் அடுத்த வருடம் தோனி வந்தாலும் அவருக்கு அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட மாட்டாது. ருதுராஜ் கெய்க்வாட்டிடமிருந்து கேப்டன் பதவியைப் பறித்து தோனியிடம் கொடுப்பார்கள் என்று நான் நினைக்கவில்லை. எனவே அணியின் நலனுக்காக அவர் ஓய்வு பெறும் முடிவை எடுக்கலாம்" என்று கூறினார்.

# டி20 கிரிக்கெட்: புதிய வரலாறு படைத்த சூர்யகுமார் யாதவ்



18வது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் ஜெய்ப்பூரில் நேற்றிரவு அரங்கேறிய 69வது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் பஞ்சாப் கிங்ஸ் அணிகள் மோதின. இதில் டாஸ் வென்ற பஞ்சாப் கேப்டன் ஸ்ரேயாஸ் அய்யர் பந்து வீச்சை தேர்வு செய்தார். அதன்படி முதலில் பேட்டிங் செய்த மும்பை இந்தியன்ஸ் 20 ஓவர் முடிவில் 7 விக்கெட்டுக்கு 184 ரன்கள் சேர்த்தது. அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 57 ரன்கள் அடித்தார். பஞ்சாப் தரப்பில் அர்ஷ்தீப்சிங், மார்கோ ஜான்சன், விஜய்குமார் வைசாக் தலா 2 விக்கெட்டுகளை கைப்பற்றினர். அடுத்து 185 ரன் இலக்கை நோக்கி ஆடிய பஞ்சாப் அணி 18.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 187 ரன்கள் குவித்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. அதிகபட்சமாக ஜோஷ் இங்கிலிஸ் 73 ரன்கள் அடித்தார். நடப்பு சீசனில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் சூர்யகுமார் யாதவ் களம் இறங்கிய 14 ஆட்டங்களிலும் குறைந்தது 25 ரன்கள் எடுத்துள்ளார். இதன் மூலம் டி20 கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ந்து அதிக முறை 25 ரன்களுக்கு மேல் எடுத்த வீரர் என்ற சாதனையை படைத்தார். இதற்கு முன்பு தென் ஆப்பிரிக்காவின் பவுமா தொடர்ந்து 13 ஆட்டங்களில் 25 ரன்கள் எடுத்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள சூர்யகுமார் யாதவ் புதிய வரலாறு படைத்துள்ளார்.

# ஜூனியர் மகளிர் 4 நாடுகள் ஆக்கி: இந்திய அணி தொடர்ந்து 2வது வெற்றி



இந்தியா, அர்ஜென்டினா, சிலி, உருகுவே ஆகிய 4 நாடுகளை சேர்ந்த ஜூனியர் மகளிர் அணிகள் பங்கேற்றுள்ள சர்வதேச ஆக்கி போட்டி அர்ஜென்டினாவில் உள்ள ரோசாரியோ நகரில் நடந்து வருகிறது.

இதில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் சிலியை வீழ்த்தி இருந்தது. இதனையடுத்து இந்திய அணி தனது 2வது ஆட்டத்தில் உருகுவே உடன் மோதியது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் இந்திய அணி 32 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி தொடர்ந்து 2வது வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில்கனிகா 2 கோல்களும், சோனம்ஒரு கோலும்அடித்தனர். உருகுவே தரப்பில் மிலாகிராஸ் மற்றும் அகுஸ்டினா மாரி தலா ஒரு கோல் அடித்தனர்.

இதனையடுத்து இந்திய அணி தனது 3வது ஆட்டத்தில் அர்ஜென்டினாவுடன் மோதுகிறது.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.